**சினோலங்கா ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் - 2020**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

சினோலங்கா ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் (“கம்பனி”) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக்

காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 1.5 நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குதல் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியின் முகாமைத்துவமானது கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப் பற்றிய மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வணிகத்தை தொடர்வதற்கான வளம் தன்னிடம் இருப்பதாக திருப்தியடைந்துள்ளது. மேலும் கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப்பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் நிர்வாகம் அறிந்திருக்கவில்லை. மேலும் 2020 ஆம் ஆண்டு யூலை 8 ஆம் திகதி இடம்பெற்ற | தேவையான மீதி நிதிகள் முறையான நிதியளிப்பத் திட்டத்தின் ஊடாக வடிவமைக்கப்படும் வரைக்கும் திட்டத்தின் கட்டுமானத்தை தொடருவதற்கு ரூபா. 6 பில்லியன் உட்செலுத்த SLIC க்கு அங்கிகரிக்கப்பட்டுள்ளது.<br><br>திட்டத்தை முழுமையாக முடிப்பதற்கு பங்கு மற்றும் கடன் மூலம் USD 175 மில்லியன் | முகாமைத்துவமானது திட்டத்தின் எதிர்கால வழிகாட்டுதலுக்கு உரிய அதிகாரியுடன் ஒருங்கிணைக்க பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

அமைச்சரவைக் கூட்டத்தில் கிராண்ட் ஹயாட் கொழும்பு திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி 2020 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டு அறிக்கை திகதியில் நடைபெற்று வருகின்றது. எவ்வாறாயினும் நிதிப்பற்றாக்குறையின் காரணமாக கிராண்ட் ஹயாட் கொழும்பு திட்டத்தின் நிர்மாண பணிகளை தொடர்வதற்கு ஸ்ரீ லங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் (இறுதி தாய் நிறுவனம்) அல்லது அரசாங்கத்தின் நிதி உதவி தேவைப்படும்.

உட்செலுத்துவதற்கான திட்டத்தில் நிறுவனம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் பற்றிய குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பொ்டி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 7.4.5 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபை மற்றும் விசேட மெய்மையாய்வு சபை என்பன நிதிச் சொத்துக்கள் மற்றும் களஞ்சியங்களின் மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு நியமனம் செய்யப்பட வேண்டும். மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களை மெய்மையாய்வு செய்வதற்கு பொருள் மெய்மையாய்வுச் சபை எதனையும் நிறுவனம் நியமனம் செய்திருக்கவில்லை. | நிலையான சொத்துக்களின் மெய்மையாய்வு கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களால் நடத்தப்பட்டு நிலையான சொத்து பதிவேடு தயாரிக்கும் பணி நடந்து வருகிறது. | பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் படி வருடாந்த சொத்து மெய்மையாய்வு மேற்க்கொள்ளப்பட்டதை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா. 193,289,884 நட்டமாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா. 5,133,182,782 ஆக காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

| ஆண்டு | 2020 | 2019 | 2018 | 2017 | 2016 |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| ஏனைய வருமானம் | 6,695,447 | 1,540,778 | 1,505,756 | 7,981,359 | 9,136,541 |
| நிதி வருமானம் | 10,464,970 | 11,041,814 | 10,339,498 | 81,954,784 | 62,686,125 |
| நிர்வாக செலவினங்கள் | 131,209,337 | 178,337,425 | 81,228,313 | 99,427,238 | 114,182,828 |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம் / (நட்டம்) | (193,289,884) | (5,133,182,782) | (202,725,525) | (29,768,795) | (50,659,905) |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

| விகிதங்கள் | 2020 | 2019 |
|---|---|---|
| திட்ட நிறைவு விகிதம் | 36.84% | 36.74% |
| மூலதன தொழிற்படு விகிதத்திற்கான தாமதக்கட்டணம் | 5.61% | 5.61% |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திட்ட முகாமைத்துவ செயற்திறனின்மை காரணமாக திட்ட நீடிப்புக்காக ரூபா. 913,174,853 தொகையை கம்பனி செலவிட்டிருந்தது. | கம்பனி அனுபவிக்கும் நிதி நெருக்கடிகளால் திட்டத்தை முடிப்பது தாமதமாக இருக்கிறது அத்துடன் இதன் விளைவாக நீடித்த செலவுகள் ஏற்படுகின்றன இது இந்த தன்மையுடைய திட்டத்தில் தவிர்க்க முடியாதது. | ஒப்பந்தங்களை வழங்குவதற்கு முன் முகாமைத்துவமானது போதுமான அளவு நிதி வருவதை உறுதி செய்ய வேண்டும். இது இந்த தன்மையான தேவையற்ற செலவைத் தவிர்க்க இயலுவாக இருக்கும். |

## 3.2 திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 15 ஆகஸ்ட் 2012 இன் அசாதாரண வர்த்தமானி எண். 1771/18 கீழ் கம்பனி USD 158,890,000 (ரூபா.18.5 பில்லியன்) மொத்த முதலீட்டில் இல.116 , காலி வீதி , கொழும்பு 03 இல் 90 சேவைக் குடியிருப்புக்களுடன் 475 அறைகள் கொண்ட நகர ஹோட்டலை நிர்மாணித்து செயல்படுத்தும் திட்டத்தை தொடங்கியிருக்கிறது. மேற்கூறிய வர்த்தமானியின் படி திட்டத்தின் தொடக்க திகதி 19 யூலை 2019 ஆக இருந்தது மற்றும் வணிக நடவடிக்கைகளை செயல்படுத்துதல் மற்றும் தொடங்குதல் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 24 மாதங்களுக்குள் திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும் அந்தத் திட்டம் இன்னும் நிறைவடைந்திருக்கவில்லை. 10 யூலை 2020 திகதியிடப்பட்ட அமைச்சரவை முடிவு எண். 20/1042/204/050-I இன் படி , இந்த திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு சுமார் ரூபா. 60 பில்லியன் ஆகும். 458 அறைகளில் 236 அறைகளைக் கொண்ட ஒரு முழுமையான ஹோட்டலாக செயல்பட 31 ஆம் நிலையுடன் 16 நிலைகளை பகுதியளவில் நிறைவு செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.<br><br>கட்டம் 2, மீதமுள்ள 236 அறைகள் மற்றும் 100 சேவை அடுக்குமாடி குடியிருப்புக்களை நிறைவு செய்யும். முதல் கட்ட நிறைவு திகதியின் இலக்கு ஆகஸ்ட் 2021 ஆகும்.<br><br>எவ்வாறாயினும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான தாமதமாக அசல் திட்ட நிறைவு திகதியான 19 யூலை 2014 இலிருந்து ஐந்து<br><br>(05) ஆண்டுகள் மற்றும் ஐந்து (05) மாதங்கள் அவதானிக்கப்பட்டது. | தாமதத்திற்கான காரணங்கள் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இது அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளைச் சார்ந்து இயங்கும் கம்பனி என்பதால் , முகாமைத்துவம் முன்னோக்கிச் செல்லும் வழியில் தொடர்புடைய அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறது. | முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டிலிருந்து எதிர்பார்த்த வருவாயைப் பெறவும் திட்டச் செலவு அதிகரிப்பதைத் தடுக்கவும் கொடுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் முகாமைத்துவம் திட்டத்தை முடிக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பெருநிறுவனத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1 இற்கு அமைய நிறுவனமானது பெருநிறுவனத் திட்டத்தை தயாரித்து இருக்கவில்லை. | திட்டத்தின் கட்டுமானத்தை முடிக்க கம்பனிக்கு தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் செயற்றிட்ட நிறைவுத்திட்டம் நடைமுறையிலுள்ளது இது தேவைக்கேற்ப பெருநிறுவனத் திட்டமாக நீடிக்கப்பட உள்ளது. | கம்பனி அதன் மூலோபாய நோக்கங்களை அடைய ஒரு பெருநிறுவனத் திட்டத்தை தயாரித்து செயல்படுத்த வேண்டும். |

### 4.2 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கான வருடாந்த செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருந்திருக்கவில்லை. | திட்டத்தை முடிப்பது தொடர்பான செயல் திட்டம் உள்ளது. | கம்பனி அதன் வருடாந்த இலக்குகளை அடைய ஒரு செயல் திட்டத்தை தயாரித்து செயல்படுத்த வேண்டும். |

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 3.7.5 இற்கு அமைய செயற்பாடுகள் உண்மையாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக அமைப்பு முறைகள் மற்றும் நடைமுறைகளை மதிப்பாய்வு செய்வது உள்ளக கணக்காய்வு முகாமையாளரின் பொறுப்பாகும். ஆனால் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளரின் பங்கு கொடுப்பனவுகளின் மீது முன் கணக்காய்வினை நடாத்துவதும் கொடுப்பனவு கைச்சாத்துக்களை உறுதிப்படுத்துவதற்கும் வரையறுக்கப்பட்டிருந்தது. | 2015 லிருந்து முறையாகப் பின்பற்றும் கொள்முதல் செயல்முறையின் மூலம் பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்திற்கு கால இடைவெளியில் உள்ளக கணக்காய்வு செயற்பாடு வெளிக்களம் செய்யப்பட்டது. அவர்கள் 30 யூன் 2018 வரை காலாண்டு அறிக்கைகளை கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர். 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கு அவர்களை பரிந்துரைக்கப்பட்டும் கட்டுமான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதாலும் கோவிட்19 கட்டுப்பாடுகளாலும் உள்ளக கணக்காய்விற்கு அழைக்கப்படவில்லை.<br><br>2022 ஆம் ஆண்டிலிருந்து உள் கணக்காய்விற்கு வெளிக்களம் செய்ய ஏற்பாடு செய்யப்படும்.<br><br>உள்ளக கணக்காய்வு முகாமையாளர் மூலம் முக்கிய விடயங்கள் கணக்காய்வுக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. | பெருநிறுவன நோக்கங்களை அடைவதற்கான வினைத்திறனுள்ள முகாமைத்துவ கருவியாக கம்பனிக்கான உள்ளக கணக்காய்வின் வினைத்திறனான தொழிற்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும். |

**4.4 கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 7.4.1 இற்கு அமைய இந்தக் குழு ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது வழக்கமான அடிப்படையில் கூட வேண்டும். எவ்வாறாயினும் மதிப்பாய்வில் உள்ள நிதியாண்டில் ஒரு முறை மாத்திரமே கணக்காய்வுக் குழுக்கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. | பொது முடக்கம் காரணமாக கூட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால் கணக்காய்வு குழுக் கூட்டங்களை வழக்கமான அடிப்படையில் நடத்த முடியவில்லை. 2022 ஆம் ஆண்டில் இதனை கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படும். | பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் படி கணக்காய்வுக் குழுவின் வினைத்திறனான செயற்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும். |

**4.5 பாதீட்டு கட்டுப்பாடு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.2 இற்கு அமைய கம்பனிக்கான வருடாந்த பாதீட்டை நிறுவனம் தயாரித்திருக்கவில்லை அத்துடன் அந்த பாதீடு வழக்கமான அடிப்படையில் கண்காணிக்கப்பட்டிருக்கவுமில்லை. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | கம்பனியின் செலவினங்களை முறையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு முகாமைத்துவத்தை செயல்படுத்துவதற்காக வினைத்திறனான பாதீட்டு கட்டுப்பாடு கம்பனியில் இருப்பதை சபை உறுதி செய்ய வேண்டும். |